வாராந்தரி

# ராணி

குடும்பப் பத்திரிகை

15.4.2012 ரூ.7



**3 புதிய தொடர்**

**'நந்தன' ஆண்டு பலன்**

**நிற்காமல் கொட்டிய தாய்ப்பால்**

**தமிழ்ப் புத்தாண்டு சிறப்பிதழ்**







# வடக்கே தெண்டுல்கர்: தெற்கே சிவகுமார்!

சென்னை தியாகராய நகர். நடிகர் சிவகுமார் வீடு. ஞாயிறு மாலை வேளையில், ஒரு மணி நேர சந்திப்பு.

கலைக் குடும்பத்தைச் சேர்ந்த சிவகுமார், மகன்கள் சூரியா – கார்த்தி ஆகியோருக்கு ரசிகர்கள் ஆர்வத்தால் பரிசுகள் கொடுப்பார்கள். ஆனால், 'காந்தி உலக மையம்' சார்பில் அன்று கொடுக்கப்பட்ட பரிசைப் பார்த்ததும் சிவகுமார் உண்மையிலே சற்று வியந்துதான் போனார்.

அவரவர்களின் பிறந்தநாளைக் குறிக்கும் சில ரூபாய் நோட்டுகளை அவர்களுடைய புகைப்படங்களுடன் அழகாக 'பிரேம்' போட்டு மூவருக்கும் கொடுத்தனர். வாங்கிய சிவகுமார் ஆச்சரியப்பட்டதோடு பார்த்தார். காந்தி பற்றிய பல சுவையான தகவல்களையும் ஆர்வமாக பகிர்ந்துகொண்டார்.

**தெண்டுல்கர்**

கிரிக்கெட் புயல் சச்சின் தெண்டுல்கருக்கும் இப்படி பரிசு கொடுத்து பாராட்டு பெற்ற இவர்கள் காந்தி மீது தீராத பக்தி கொண்டவர்கள். காந்தியின் தபால் தலையில் தொடங்கி, ரூபாய் நோட்டுகள் வரை பிரம்மிக்க வைக்கும் சேகரிப்புகள் இவர்களின் கைவசம். பார்த்து முடிக்க மணிக்கணக்கு ஆகும். ஆனாலும், சிவகுமார் அதில் பலவற்றையும் பொறுமையாக பார்த்தார்.

"காந்தி மீது பற்று கொண்ட நீங்கள், சிவகுமார் – தெண்டுல்கர் போன்றோர்களை இப்படி ஆராதிப்பது ஏன்?" என்று கேட்டபோது, "மகாத்மா, தேசத்துக்கு மட்டுமல்ல... உலகுக்கே வழிகாட்டி. சிவகுமார் – தெண்டுல்கர் போன்றவர்கள் மகத்தான மனிதர்கள். இன்றைய சமுதாயத்துக்கு நல்ல முன் உதாரணங்கள். அதனால்தான் இத்தனை அன்பு" என்றார்கள்.

இந்த முயற்சிகளுக்கு முதுகெலும்பாக இருப்பவர் இளைஞர் எம்.எல். ராஜேஷ்.

அவர் சொல்கிறார்:

**6 வயதில் தொடக்கம்**

"நான் சென்னையை அடுத்து திருவள்ளூர் மாவட்டம் புது கும்மிடிப்பூண்டியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். வயது 32. இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். 6 வயதில் தொடங்கிய தபால்தலை சேகரிப்பு பழக்கம், இன்று வளர்ந்த நிலையை எட்டியுள்ளது. காந்திய சேகரிப்புகளுடன் கிரிக்கெட் தபால்தலைகள், அரிய இந்திய ரூபாய் நோட்டுகள் – நாணயங்கள், பழங்கால நாணயங்கள் மற்றும் பிரபலமானவர்களின் கையெழுத்துகள் ஆகியவைகளை சேகரித்து வருகிறேன்.

பொழுதுபோக்காக ஆரம்பித்த தபால்தலை சேகரிப்பு பழக்கம் ஒரு இலக்காக மாறியபோது நான் தேர்ந்தெடுத்தது இரண்டு அம்சங்கள். ஒன்று காந்திஜி, மற்றொன்று கிரிக்கெட். இதில் முதலில் ஆர்வமாக சேகரித்தது கிரிக்கெட் தபால்தலைகளைத்தான். அது படிப்படியாக முன்னேறி, காந்திஜி தபால்தலைகளை விரும்பத் தொடங்கியது. தீவிரமாக தேடி, உலக